**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 391//2022 PW . 2**

| | | | |
|---|---|---|---|
| Name : Amudha | | Husband's Name | : Arumugam |
| Village: | | Taluk | : |
| Age : | | Occupation | : |
| Caste : | | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2023

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் காரைக்குடி பாரிவள்ளலில் வசித்து வருகிறேன். எனக்கு 2 மகள்கள். எனது மகள் பூமிகா தற்போது நீட்டுக்கு படித்து வருகிறார். எனது மகளும் அசா. 1 மகளும் தோழிகள் ஆவர். அதனால் கவிப்பிரியா எனக்கு பழக்கம். அசா. 1 தனது குடும்பத்தை பற்றி அவ்வப்போது என்னிடம் கூறுவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் கவிப்பிரியாவின் கணவர் ஆவார். 2016ம் ஆண்டு எனது மகள் 6ம் வகுப்பு படித்தபோது அசா. 1 தனது வீட்டில் வந்த சண்டையை சொல்லுவார். ஒருநாள் போன் செய்து என்னை கூப்பிட்டார். அவரது மகளை பரிட்சைக்கு அழைத்து செல்லுமாறு சொன்னார். நான் அசா. 1 வீட்டிற்கு சென்றபோது அவர் தனது கணவருடன் சண்டை என கூறி அழுதார். தனது கணவர் மூக்கில் அடித்து விட்டதால் மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்று சொன்னார். நான் மருத்துவமனைக்கு அவருடன் செல்லவில்லை. இது சம்பந்தமாக கவிப்பிரியா அவர் கணவர் மீது புகார் கொடுத்திருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

போலீசார் என்னை விசாரித்தபோது நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விபரத்தை தான் தெரிவித்தேன் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு அசா. 1ன் வீட்டிற்கு சென்றேன் என்றால் காலையில் பள்ளிக்கு செல்லும்போது சுமார் 9 மணிக்கு சென்றேன். நான் அங்கு சென்றபோது அசா.1ன் மகள் அனிதாஸ்ரீ பள்ளிக்கு கிளம்பவில்லை என்றால் சரிதான். எனவே அன்று அவரை நான் பள்ளிக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். நான் வீட்டிற்கு சென்றபோது எதிரி அங்கு இல்லை என்றால் சரியல்ல. அங்கு இருந்தார். வீட்டின் போர்டிகோவில் எதிரி இருந்தார். பத்து நிமிடம் அவர் வீட்டில் இருந்தேன். நான் போனவுடன் எதிரி வீட்டிலிருந்து எதிரி வெளியே சென்றுவிட்டார். நான் அங்கு இருந்த நேரத்தில் எதிரி

அசா. 1ஐ அடிக்கவோ, திட்டவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே அசா. 1 மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். அசா. 1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. புகார் கொடுத்ததாக சொன்னார். அப்போது அவரது மகள் எனது வீட்டில் இருந்தார். சம்பவம் நடந்த அன்றே தான் புகார் கொடுத்தாரா என்றால் நினைவு இல்லை. சம்பவம் நடந்த அன்று என்ன கிழமை என்று தெரியாது. அசா.1 வீட்டிற்கு சென்று விட்டு 10 நிமிடத்தில் நான் எனது மகளை பள்ளிக்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான். நான் அசா. 1 வீட்டிற்கு சென்றபோது அங்கு எதிரி, அசா. 1 மற்றும் அவரது மகள் ஆகியோர் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். கவிப்பிரியாவிற்கு மூக்கில் மட்டும் தான் காயம் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது கவிப்பிரியாவிற்கு மூக்கில் மட்டும் தான் காயம் என்று தெரிவித்தேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் அசா. 1 வீட்டிற்கும் அரை கி.மீட்டர் தூரம் இருக்கும். சண்டை நடந்த விபரம் அசா. 1 எனக்கு போன் செய்த போதுதான் தெரியும். எத்தனை மணிக்கு போன் செய்தார்கள் என்று சரியாக ஞாபகம் இல்லை. அசா.1 போன் செய்த பிறகு நான் எனது மகளை வீட்டில் விட்டு விட்டு அசா. 1 மகளை அழைத்துவருவதற்காக சென்றேன். அப்போது அவர்கள் சிதம்பரம் செட்டியார் பள்ளியில் படித்தனர். எனது வீட்டிற்கும் பள்ளிக்கும் சுமார் 2 கி.மீட்டர் தூரம் இருக்கும். பள்ளி ஆரம்பிக்கும் நேரம் காலை 8.45 மணியாகும். சம்பவம் நடந்த அன்று எனது மகளை சரியான நேரத்தில் காலையில் பள்ளியில் விட்டுவிட்டேனா என்றால் நினைவு இல்லை. எனது கணவர் தற்போதும் வெளிநாட்டில் தான் இருக்கிறார். கவிப்பிரியா எனக்கு நெருங்கிய தோழி என்றால் சரிதான். அசா.1க்கும் எதிரிக்கும் எவ்வளவு நாட்களாக பிரச்சனை நடக்கிறது என்றால் அதுபற்றி தெரியாது. முன்பு ஒரு வழக்கு நடப்பதாக சொன்னார். அந்த வழக்கு பற்றி தெரியாது. நான் அங்கு சென்றபோது பிரச்சனை பற்றி எதிரியிடம் கேட்டேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி அசா. 1 மீது விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதை திசை திருப்புவதற்காக அசா. 1 பொய்யான சம்பவத்தை சொல்லி புகார் கொடுத்திருந்தார் என்றும் அசா. 1 எனது நெருங்கிய தோழி என்பதால் அவருக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கவிப்பிரியா தற்போது வரை சம்பவம் நடந்த வீட்டில் வசிக்கிறார் என்றால் சரிதான்.

மறு விசாரணை: இல்லை